Registered at the C. P. O as a Newspaper

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY தேசிய தினசரி

தபாற் பெட்டி எண் 46

போன் 389 | மலர் 3 | யாழ்ப்பாணம். பிலவ தை 23 ஆம் நாள் ஷஃபான் 29 (5-2-62) | திங்கட்கிழமை | இதழ் 307

அநுராடி' சில்வா கைது

மற்றொரு காப்டனும் கைதானார்

தடுப்புக் காவலில் மொத்தம் 23 பேர்

கொழும்பு, ஞாயிறு

உலகின் முதல் பெண் பிரதம மந்திரியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காகச் செய்யப்பட்டதாகக் கருதப்படும் கோல்வியில் முடிந்த திடீர்ப்புரட்சித் திட்டம் சம்பந்தமாக இன்று மேலும் இருவர் கைதுசெய்யப் பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

காப்டன் என். எஸ். ஜயக்கொடி, திரு. அநுரா டி' சில்வா ஆகியோரே இன்று காலை கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப் பட்டவர்கள.

சதித்திட்டம் சம்பந்தமாக இதுவரை மொத்தம் 23 பேர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சதித்திட்டம சமபந்தமாக விரைவில் விபரமான அறிக்கையொன்றை தாம் வெளியிடப்போவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம்:

தொற்றுநோய் நிலையத்துக்கு உதவிமேயர் திடீர் விஜயம்

நோயாளிகளைக் கவனிக்க எவரும் இருக்கவில்லை!

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்தில் தொற்று நோய் பீதி மக்களிடையே வலுவடைந்து வரும் இந்நேரத்தில் வடபகுதி தொற்று நோய் நிலையத்திற்கு யாழ்ப்பான உதவிமேயரும் ஆஸபத்திரிக் கமிட்டி அங்கத்தவருமான திரு. ஆ. துரைராஜசிங்கம் நேற்று திடீர் விஜயம் செய்து அங்குள்ள சீர்கேடான நிலைமையை நேரில் பார்வையிட்டார்.

அவர் அங்கு விஜயஞ்செய்த போது எந்த வைத்திய அதிகாரியும் அங்கு இருக்கவில்லை. இந்த நிலையத்தில் தொற்று நோயால் பீடிக்கப்பட்ட மூவர் பாழடைந்த அறைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களில் ஒருவர் பெண் மணியாகும். இப்பெண்மணியைக் கவனிக்க நேற்றுப் பகல் ஒரு பெண் அட்டெண்டன்ட் கூட அங்கு இருக்காததால் அந்நோயாளர் உதவிக்கெவருமின்றி கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்.

இந்நிலையத்தில் ஒரேயொரு பெண் அட்டெண்டன்ட் மாத்திரம் இருப்பதாகவும் கடந்த இரண்டு காட்களாக 48 மணி நேரம் அவர் தொடர்ந்து வேலை செய்துவிட்டு நேற்றுப் பகலில் ஓய்வெடுத்துக் கொள்ளச் சென்றுவிட்டதாகவும் விசாரித்ததில் தெரியவந்தது.

இத்தொற்று நோய் நிலையத்தின் அவல நிலைபைப்பற்றித் திரு துரைராஜசிங்கம் மேலிடத்திற்கு கடுமையான புகாரொன்றைச் செய்யப் போவதாகத் தெரிவித்தார்.

திரு. லிடிறெர் இலங்கை விஜயம்

கொழும்பு, ஞாயிறு

நியூயோர்க்கிலுள்ள விஞ்ஞான செயலாட்சி சர்வதேசக் கமிட்டியின் தலைவர் திரு. ஏ. எம். லிடிறெர் இன்று இலங்கை வந்து சேருவார். இலங்கை உற்பத்தியாளர் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு திரு. லிடிறெர் ஒரு சொற் பொழிவாற்றுவார்.

கிரிக்கட்

இங்கிலாந்து முன்னேறுகிறது

டாக்கா, பெப். 4

இங்கிலாந்து கோஷ்டிக்கும் பாகிஸ்தான் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்றுவரும் மூன்றுவது 'டெஸ்ட்' கிரிக்கட் போட்டியில் இங்கிலாந்து தனது முதலாவது இன்னிங்சில் நான்கு விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 453 ரன்கள் எடுத்துள்ளது பாகிஸ்தான் தன்து முதலாவது இன்னிங்ஸில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 253 ரன்கள் எடுத்திருந்தது. இன்றைய ஆட்டத்தில் இங்கிலாந்து கோஷ்டியைச் சேர்ந்த டெக்ஸ்டர் இருநூறு ரன்களுக்கும் அதிகமாக அடித்தார்.

அஷ்டகிரக நிவர்த்தி ஆராதனை

உடுப்பிட்டி, ஞாயிறு

அஷ்டகிரகதோஷ நிவாரண ஆராதனை ஒன்று ஞாயிறு பகல் துன்னாலை வடக்கு கோவிற் குடவைப் பிள்ளையார் கோவிலில் நடைபெற்றது. பகல் விசேஷ அபிடேகத்தைத் தொடர்ந்து சைவப்புலவர் த. குமாரசுவாமிப்பிள்ளை "சம்பந்தர் சந்திப்பு" என்னும் பொருள்பற்றி அரிய கதாகாலட்சேபம் ஒன்று பக்கவாத்தியங்கள் சகிதம் நிறைவேற்றினர்.

எகிப்தில் டிட்டோ

அலக்ஸாந்திரியா, பெப். 4

யூகோஸ்லேவிய ஜனதிபதி மார்ஷல் டிட்டோ இன்று அலக்ஸாந்திரியா வந்து சேர்ந்தார். ஐக்கிய அரபுக் குடியரசில் சுற்றுப்பிரயாணம் செய்வதற்காக மார்ஷல் டிட்டோ உத்தியோகரீதியில் விஜயம் செய்துள்ளார்.

ஐக்கிய அரபுக் குடியரசு ஜனதிபதி நாஸரை மார்ஷல் டிட்டோ சந்தித்துப் பேசவிருக்கிறார். இப்பேச்சுவார்த்தைகளில் மேற்கு இரியான் விடுதலை சம்பந்தமாக இந்தோனேஷியாவுக்கு எவ்வித உதவி அளிப்பதென்பது பற்றியும் இருவரும் ஆலோசனை செய்வார்களென்று எதிர்பார்க்கப் படுகிறது.

ஒரேகிணற்றில்ஒருமாதத்தில்

இரு குழந்தைகள் பலி

பஞ்சமி பிசாசுதான் காரணமா?

விசாரணை செய்ய உத்தரவு

யாழ்ப்பாணம், திங்கள்

ஒரு மாதத்திற்குள் இரண்டு குழந்தைகள் ஒரே கிணற்றில் விழுந்து மாண்டதற்குக் காரணம் என்ன? குழந்தைகளின் பெற்றோரும் உறவினரும்கூறுவதுபோல் பிசாசுதான் காரணமா? இக்குழந்தைகளின் மரணம்பற்றிய மர்மத்தை பொலிசார் கண்டுபிடிக்க முயற்சி செய்ய வேண்டும். பொதுமக்களும் இதற்கு உதவிபுரிய வேண்டும்.

கரையூரில் 5 வயதுக் குழந்தையொன்றின் மரண விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் தமது விசாரணையின்பின் இவ்வாறு தெரிவித்தார்.

வலித்தை மார்சலீன் என்ப வருடைய 5 வயது மகனை விக்டர் பிலியாஸ என்றழைக்கப்படும் ஜோ என்னும் சிறுவன் கரையூரிலுள்ள சென்ற் பற்றிக்ஸ வீதியைச் சேர்ந்த 17-ம் நம்பர் வீட்டிலுள்ள கிணற்றில் விழுந்து இறந்தது சம்பந்தமான விசாரணை நடைபெற்றபோதே மேற்படி சம்பவங்கள் தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணையை திடீர் விசாரணை அதிகாரி திரு. எஸ் கனகரத்தினம் ஜே. பி. யு. எம். நடத்தினர். இறந்தவரின் தாயான மார்சலீன் சவுரியம்மா சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

சென்றமாதம் 10 ந்திகதிமரணவரை நான் எனது கணவருடனும் இறந்தவருட்பட 5 குழந்தைகளுடனும் கரையூரிலுள்ள சென்ற் பற்றிக்ஸ வீதியிலிருக்கும் 17-ம் நம்பர் வீட்டில் வசித்து வந்தோம். சென்ற மாதம் 10-ம் திகதி 9 மாதக் குழந்தையான எனது மருமகள் மரியசீவி வீட்டுக்கு அருகிலுள்ள கிணற்றில் விழுந்து மரணமானாள். பிரேத அடக்கத்தின் பின்னர் இந்த வீட்டிலிருந்தவர்களெல்லோரும் வீட்டில் ஏதோ பிசாசு குடிகொண்டிருப்பதாகப் பயந்து வீட்டை விட்டு வெளியேறினோம். நான் கரையூரிலுள்ள மத்தியகிழக்கு வீதியிலிருக்கும் 23/1 நம்பர் வீட்டில் குடியேறினேன். இறந்தவரின் பெற்றோர்களும் வேறு வீட்டுக்குக் குடியேறினர்கள். எனது மகன் இறந்த தினத்தன்று நானும் எனது மகனும் காலை சுமார் 6 மணிக்கு நித்திரைவிட்டெழுந்த நான் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்த போது எனது மகன் தனது கைகால் அலம்புவதற்காகத் தன்னைக் கிணற்றடிக்குக் கூட்டிச் செல்லுமாறு கேட்டான். நான் வாளியில் தண்ணீர் இருப்பதாகவும் அதிலிருக்கும் தண்ணீரை உபயோகிக்குமாறும் அவனிடம் கூறினேன். சிறிது நேரத்தின்பின் அவனை காணவில்லை. இதனால் நான் அவனைத் தேடிச் சென்றேன். தேடிச் சென்றபோது மரியம்மா என்பவரும் சரோஜா என்பவரும் தாம் எனது மகனைச்சென்பற்றிக்ஸவீதியில் ஒரு மின்சார கம்பத்தோடுசாய்ந்து நிற்கக்கண்டதாக தெரிவித்தார்கள். காலை 8 மணிக்கு மீன் பிடிக்காரரான எனது கணவர் வீட்டுக்கு வந்தார். இருவரும் சேர்ந்து தேடினோம். காலை சுமார் 11-30 மணியளவில் எனது மருமகள் விழுந்து மரணமான அதே கிணற்றில் எனது மகனும் இறந்து கிடந்ததைக் கண்டேன். எனக்கு யாரிலும் சந்தேகமில்லை. எனக்கு எதிரிகளொருவருமில்லை. இது பிசாசின் வேலையாக இருக்கலாமென்றே நான் நினைக்கிறேன்.

இந்த மரணம் சம்பந்தமாக நடைபெற்றவிசாரணையின்போது மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். கனகரத்தினம் தெரிவித்ததாவது:

ஒன்பது வயதுக் குழந்தையொன்று மேற்படி கிணற்றுள் விழுந்து இறந்த சம்பவம் நிகழ்ந்து ஒரு மாதமிருக்காது.

(8-ம்பக்கம் பார்க்க)

தேர்தலில் வழக்கறிஞர்கடமை

திரு. ஜீவானந்தம் ஜோஸ்யம்

கட்சிப் பற்று எதுவும் இல்லாத வழக்குரைஞர்கள் ஒருங்கு திரண்டு சாதி, மதம், கட்சி வேறுபாடு கருதாது தகுதி, திறமையுள்ள அபேட்சகர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் எனத் தமிழவேள் திரு. பி. டி. இராசன் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அதில் கண்டிருப்பதாவது:- பெரும்பான்மைக் கட்சிக்கு எவ்வளவோ வாய்ப்பு வசதிகள் இருந்தும் தகுதியானவர்களை நிறுத்துவது அதற்கு இடையூறாக இருக்கிறது. சிறுபான்மைக் கட்சிகளின் நிலையும இதுதான். சிறுபான்மைக் கட்சிகள் நிறைய இருக்கின்றன. சாதி, பண வலிமையைப் பொறுத்தே வெற்றி அமைகிறது. இந்தியாவில் ஜனநாயகமே ஆபத்தான நிலையில் இருக்கிறது. இந்த வருந்தத்தக்க நிலையில், வழக்குரைஞர்கள் தங்கள் கடமையை ஆற்ற வேண்டுமெனக் கருதுகின்றேன்.

சுயேச்சையாகப் போட்டியிடும் அபேட்சகர்கள் தேர்தல் வேலையைச் சமாளிப்பது கடினமாக இருக்கிறது. எனவே வழக்குரைஞர்கள் தகுதி வாய்ந்த அபேட்சகர்களுக்கு முழு ஆதரவையும் அளிக்க வேண்டும். பல அபேட்சகர்களுக்கு ஆதரவளிக்க முடியாத நிலையில் இருக்கலாம் அபேட்சகர்களின் எண்ணிக்கையைவிட, அபேட்சகர்களின் தகுதியைத் தாம் கருத்தில் கொள்ளவேண்டும். இப்போதுகூட மக்கள் சபையிலும் சட்ட சபைகளிலும் வழக்குரைஞர்கள் தங்கள் திறமையையும், தகுதியையும் வெளிக் காட்டியுள்ளனர். குறைந்த எண்ணிக்கையுடன் இருந்தாலும் தகுதியானவர்கள் வெற்றிக்கு வழக்குரைஞர்கள் உழைத்தால், மக்களது நம்பிக்கையைப் பெற முடியும்.

கம்யூனிஸ்ட் ஜீவானந்தம் ஜோஸ்யம்

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பி. ஜீவானந்தம் இப்பொதுத் தேர்தலைப் பற்றி சோதிடம் கூறியிருக்கிறார். அவர் கூறியதாவது:- "காங்கிரஸ்காரர்கள் தேர்தல் வேலைகளில் அனுபவம் உள்ளவர்கள்; கெட்டிக்காரர்கள். தங்கள் அதிகாரம் செல்வாக்குகளை உபயோகித்து ஜனங்களைக் கவரும் கலையில் தேர்ந்தவர்கள். தாம் நாட்டில் இத்தத் தடவையும் காங்கிரஸ பதவிக்கு வருவது உறுதி சுதந்திரா, தி. மு. க. ஆகியவற்றிற்கு மக்கள் மேல் நம்பிக்கையில்லை; உறுதியான கொள்கைகள் இல்லை. ஏதாவது செய்து ஜெயிக்கப்பார்க்கிருர்கள். இவர்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு வெற்றி கிட்டாது. சுதந்திராக் கட்சி தேவர் செல்வாக்கிலும், ராமசாமி படையாச்சி செல்வாக்கிலும் சில ஸ்தானங்கள் பெறுவது உறுதி. தமிழ் நாட்டில் மக்கள் சென்ற தேர்தலைக் காட்டிலும் மிகவும் முன்னேறி இருக்கிருர்கள் மாறுதல் உண்டாகியே இருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி 20 ஸ்தானங்களும் பார்லிமெண்டிற்கு 6 ஸ்தானங்களும் பெறும். நெல்லை ஜில்லாவில் மூன்று ஸ்தானங்கள் கிடைக்கலாம். தஞ்சையும், கோவையும் முன்னணியில் இருக்கும்."

தமிழகமும் பொதுத்தேர்தலும்

தன்னுடைய தொகுதிபற்றி குறிப்பிடுகையில் தமிழ் தேசியக் கட்சி சம்பத். கண்ணதாசன், தமிழரசு கழக ம. பொ. சி. போன்ருேர்கள் தன்னை ஆதரிப்பதாகவும், தான் ஒரு பத்திரிகையாளன், இலக்கிய விமர்சகன் என்ற முறையில் தமிழ் எழுத்தாளர்களின் ஆதரவு கிடைத்திருப்பதோடு அவர்கள் தேர்தல் நிதியும் சேர்த்துக் கொடுக்கப்போகிருர்கள் என்றும், தி மு. க. வின் எதிர்ப்பு தனக்குக் கடுமையாக இராது என்றும் நடுத்தர மக்கள் படித்தவர்கள் தன்னை விரும்புகிருர்கள்; ஆகவே ஜெயிப்பது உறுதி என்றும் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் தொகுதியில் தலைவர்கள் முற்றுகை

காஞ்சிபுரம் தொகுதியில் தி. மு. க. வுக்கு எதிராக ஓர் பலப்பரீட்சையை இத்தேர்தலில் நடாத்த அமைச்சர்களும் மற்றைய எதிர்க் கட்சிகளும் தீவிரமாகத் திட்டம் தீட்டிவருகின்றனர். காஞ்சிபுரம் தொகுதியில் திரு. அண்ணாத்துரையை ஆதரித்து தி மு. க. வினர். சுதந்திராக் கட்சி டாக்டர் கிருஷ்ணசாமி ஆகியோர் தீவிர பிரசாரம் செய்து வருகின்றனர். இத்தொகுதியில் காங்கிரஸ அபேட்சகராக சட்ட சபைக்குப் போட்டியிடும் திரு. நடேச முதலியாரை ஆதரித்துப் பிரசாரஞ் செய்ய முதல் அமைச்சர் திரு. காமராஜர், அமைச்சர் திரு. சுப்பிரமணியம், திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் ஆகியோர் காஞ்சிபுரத்தில் முற்றுகையிடவிருக்கிருர்கள். அகில இந்திய காங்கிரஸ கட்சித் தலைவர் திரு. சஞ்சீவி ரெட்டியும் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்து காங்கிரஸ கட்சிக்காக தேர்தல் பிரசாரம் செய்கிருர். தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. அண்ணாத்துரையை ஆதரிப்பதில்லை என்றும் அண்ணாத்துரையை எதிர்த்துப் போட்டியிடும் காங்கிரஸ அபேட்சகர் நடேச முதலியாரை ஆதரிப்பதென்றும் கம்யூனிஸ்ட் கட்சி முடிவு செய்துள்ளது. காஞ்சிபுரத்தில் "வாக்குரிமை" என்ற காங்கிரஸ தேர்தல் பிரசார சினிமா, இரு சினிமா கொட்டகைகளில் காட்டவும் ஏற்பாடாகியிருக்கிறது.

தேர்தல் பிரசார சினிமாப் படம்

தமிழ் நாடு காங்கிரஸ கட்சி "வாக்குரிமை" என்ற காங்கிரஸ் தேர்தல் பிரசார சினிமாப் படத்தை தயாரித்திருக்கிருர்கள். இப்படத்தில் டி. ஏ. மதுரம், ராஜசுலோசனு ஆகிய நடிகைகள் நடித்திருக்கிருர்கள். சென்னையிலுள்ள ஒரு சினிமாக் கொட்டகையில் இந்தப் படம் போட்டுப் பார்க்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் இத்தேர்தல் பிரசார சினிமாப் படம் காட்டப்படவிருக்கிறது. ஒவ்வொரு மக்கள் சபைத் தொகுதிக்கும் இப்படத்தின் இரு பிரதிகள் அனுப்பிவைக்கப் படவிருக்கிறது.

தி. மு. க. அபேட்சகர் மீதுள்ள நிபந்தனைகள் தளர்த்தப்பட்டன

திருப்பரங்குன்றம் தொகுதியில் தி. மு. க. சார்பில் போட்டியிடும் மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர் திரு. எஸ். முத்து மீது விதிக்கப்பட்டிருந்த பொறுப்பு நிபந்தனைகள் தளர்க்கப்பட்டுள்ளன.

மதுரை, சோழவந்தான், அலங்காநல்லூர் ஆகிய ஊர்களுக்கும் செல்வதற்கு திரு. முத்துவை அனுமதித்து மதுரை மாவட்ட செசன்சு நீதிபதி திரு. இலட்சுமணன் உத்தரவிட்டுள்ளார். திரு. ஆ. இரத்தினத்தைக் கொலை செய்ய முயன்றதாகத் தொடரப்பட்ட வழக்கில் அவர் மேற்கண்ட மூன்று ஊர்களுக்கும் செல்லக்கூடாது என்று முன்னர் நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே திரு. முத்துவின் சார்பில், தன் மீதுள்ள நிபந்தனைகளைத் தளர்த்தும்படிவேண்டி நீதி மன்றத்தில் மனு அளிக்கப்பட்டது. அம்மனுவில் கூறப்பட்டிருந்ததாவது: திரு. எஸ். முத்து திருப்பரங்குன்றம் தொகுதியில் தேர்தலில் அபேட்சகராக நிற்கின்ருர். அத்தொகுதியில் பெரும்பகுதி மதுரை நகரைச் சேர்ந்தவைகளாக உள்ளன. ஆகவே அப்பகுதிகளுக்குச் செல்லவேண்டியதாயிருக்கிறது. மதுரை மாவட்டத்தில் பல இடங்களில் அவரது கட்சியைச் சேர்ந்தவர்கள் பலர் தேர்தலில் நிற்கின்றனர். ஆகவே அவர்களுக்காக மதுரை மாவட்டம் முழுவதும் செல்லவேண்டியுள்ளது. நிபந்தனைகள் தளர்த்தப்படாவிட்டால் அவரும் அவரது கட்சியைச் சேர்ந்தவர்களும் பாதிகக்கப்படுவார்கள்.

சுதந்திரதினத்தில் பிரதமரின் வேண்டுகோள்

கொழும்பு, ஞாயிறு

இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நாட்டுக்கு விடுத்த சுதந்திர தினச் செய்தியில், சிலர் பரப்பிவரும் பொய் வதந்திகளுக்கு மக்கள் செவி சாய்க்காது, நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டுள்ளார்.

பிரதமர் மேலும் கூறியிருப்பது:-

"பழமை வாய்ந்த புனித நகரமான அநுராதபுரத்தில் நமது நாட்டின் 14-வது சுதந்திர தின விழாவைக் கொண்டாடுவதென முடிவு செய்திருந்தோம். ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை கவிழ்த்துவிட்டு, வேறு வகையான அரசாங்கத்தை நிறுவ மேற்கொண்ட முயற்சிகள், உரிய நேரத்தில் முறியடிக்கப்பட்டுவிட்டது. சில விரோதிகளின் காரணமாகத் திட்டமிட்டபடி, சுதந்திரதின விழாவை அநுராதபுரத்தில் கொண்டாட முடியாமல் போய்விட்டது.

சதிகாரர்களைக் கண்டுபிடித்து தண்டிப்பதில் நாம் நிச்சயம் பின்நிற்கப்போவதில்லை சதி பற்றி முறைப்படி பூரண விசாரணை செய்து வருகிருேம். மக்கள் அமைதியுடன் இருந்து சகல உதவிகளையும் அரசாங்கத்துக்கு அளிக்க வேண்டும். கூடிய விரைவில் சதி பற்றிய ஒரு முழு அறிக்கை வெளியிடப்படும்.

சுஹ்ரவர்தி

லாகூர், பெப் 4

சென்ற செவ்வாயன்று பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்ட பாகிஸ்தான் முன்னுள் பிரதம மந்திரி ஸ்ரீ எச். எஸ் சுஹ்ரவர்தி சார்பில் இங்கு ஹாபியஸ கார்பஸ் மனுதாக்கல் செய்யப் பட்டது.

சதி நடவடிக்கைகளுக்காக கைது செய்யப் பட்ட அவர் ஒரு வருஷம் சிறையில் வைக்கப் படுவார் என்று அரசாங்கம் ஏற்கனவே அறிவித்தது

திங்களன்று மனு விசாரணைக்கு வரும்

உங்கள் தினப்பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர்

பிலவவருடம் தை மாதம் 23-ந் தேதி (5-2-62) திங்கட்கிழமை காலை 6-39 வரை அமாவாசை அதன்பின் இரவு 4-25 வரை சுக்கிர பிரதமை காலை 8-01 வரை திருவோணம், பின் அவிட்டம். அமிர்த சித்தயோகம். மஹோதயரஷ் புண்ணிய காலம். அட்டகிரக சேர்க்கையின் மூன்ருவது தினம். இன்று இரவு 7 30 மணிக்கு மேல் சந்திரன் மகர ராசியை விட்டு விலகுவதுடன் எட்டுக்கிரக சேர்க்கை கலைகின்றது. இன்று பகவத் பிரார்த்தனையில் காலம் கழிக்கவும்.

இன்று பிறந்தவர்களுக்கு

இன்று பிறந்தவர்களுக்கு பிற்கால வாழ்க்கை நல்ல விசேட பலன்களைத் தரும். வித்தை விருத்தி. குடும்ப நன்மைகள், பூமி வீடு வாகன நலன்கள், ஆதியனவுக்கு இடமுண்டு. உத்தியோகத்திலிருப்பவருக்கு பதவிப் பேறுகள், பணவரவுகள் இருக்கும். வர்த்தகருக்கு தொழிலபிவிருத்தியும் மாணவருக்கு வித்தை அபிவிருத்தியும் பெண்களுக்கு மங்கல கருமங்கள் நடத்தல், தனலாபம் குடும்ப சந்தோஷம் ஆதியனவும் காணப்படுகின்றன.

அச்சுவினி: புதிய முயற்சி, கஷ்டம், சஞ்சலபுத்தி.

பரணி: ஊழியர் நன்மை, செய்தொழில் சித்தி.

கார்த்திகை: செய்காரிய தாமதம், கடும் உழைப்பு.

ரோகிணி: செய்தொழில் விருத்தி, சுகம்.

மிருகசீரிடம்: பணநிலையில் திருப்தி, உணவுவிருத்தி.

திருவாதிரை: தொழில் வெற்றி, நற்செய்தி.

புனர்பூசம்: குடும்பத்தில் வைத்தியச் செலவு, கஷ்டம்.

பூசம்: செய்தொழில் சித்தி, நிம்மதி.

ஆயிலியம்: உறவினர், நண்பர் கொண்டாட்டம், செலவு.

மகம்: தொழிலபிவிருத்தி, நண்பரால் இலாபம்.

பூரம்: பிரயாணக்கஷ்டம், நலக் குறைவு, செலவு.

உத்தரம்: தேகநலம் குறைதல், மனச் சஞ்சலம்.

அத்தம்: குடும்பநலம். சந்தோஷம்.

சித்திரை: கடன்படல், செலவதிகம், நலக்குறைவு.

சுவாதி: முதியோர் நட்பு, தெய்வசிந்தனை, சுகம்.

விசாகம்: செய்தொழில் மேன்மை, உறவு விருத்தி.

அனுஷம்: கடும் உழைப்பு, பயன் குறைவு. மனமடிவு.

கேட்டை: உறவுவிருத்தி, செய்காரியவிருத்தி, நன்மை.

மூலம்: சமூக விரோதம், பணக் கஷ்டம், சஞ்சலம்.

பூராடம்: குடும்ப சந்தோஷம், செய்தொழில் நன்மை.

உத்தராடம்: தாயாதிகளால் கஷ்டம், பணமுடை, சஞ்சலம்.

திருவோணம்: நலவிருத்தி, சந்தோஷம், பணவரவு.

அவிட்டம்: கடுப் உழைப்பு, ஊதியக் குறைவு, கஷ்டம்.

சதயம்: தெய்வ வழிபாடு, பெரியோர் சேர்க்கை.

பூரட்டாதி: தேகநலம். தொழிலூக்கம், பணவரவு

உத்தரட்டாதி: குடும்ப வைத்தியச் செலவு, சஞ்சலம்.

ரேவதி: தொழில் நலம், சந்தோஷம், பணமுடை நீங்கல்.

மகாயாகம்

மடுல்கல, உளுகங்கை கோவிலில் நடைபெற்று வரும் மகாயாகத்தில், நாளை திங்கட்கிழமை (5-2-62) சி. எஸ். எஸ். மணிபாகவதரின் சிஷ்யரும் நல்லூரைச் சேர்ந்தவருமான திரு. எஸ். கணேசசுந்தரம் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். அன்பர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர். உபயம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. எஸ். எஸ். சுந்தரலிங்கம்.

இங்ஙனம்,
டி. வி. எஸ். வி. சர்மா,
உளுகங்கை, பிரதமகுருக்கள்.
மடுல்கல.

[illegible]ள் நோய்

[illegible]டுத்த உத்தரவாதம் [illegible]ரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் அடங்கிய கற்றலோக் Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணானந்தர்,
[illegible]யார் கோவிலடி,
[illegible]

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் - கண்ணேட்டம்

மொத்த இடங்கள் 205 — [illegible] போட்டியிடுவோர் 793

மாவட்டம்	தொகுதிகள்	காங்.	தி. மு.க.	சுத.	கம்.	[illegible]	மொ.
சென்னை	10	10	9	8	1	[illegible]	[illegible]
செங்கல்பட்டு	14	14	8	5	1	[illegible]	[illegible]
வடஆற்காடு	20	20	18	7	3	[illegible]	85
தென்ஆற்காடு	19	19	16	9	4	[illegible]	62
சேலம்	23	23	20	7	3	[illegible]	84
கோவை	21	21	17	8	14	[illegible]	93
நீலகிரி	2	2	1	2	2	[illegible]	10
மதுரை	20	20	11	8	9	[illegible]	[illegible]
திருச்சி	19	19	16	8	3	[illegible]	68
தஞ்சை	20	20	14	7	13	[illegible]	73
ராமநாதபுரம்	14	14	3	9	4	[illegible]	49
நெல்லை	17	17	8	16	8	[illegible]	75
கன்யாகுமரி	6	6	1	—	3	[illegible]	20
மொத்தம்	205	205	142	94	68	[illegible]	793

— திருச்சி மாவட்டம் அந்தநல்லூர் [illegible] தொகுதிக்கான தேர்தல் [illegible] நடைபெறும். அந்தநல்லூர் இங்கு சேர்க்கப்படவில்லை.

கியூபாமீது அமெரிக்கா பொருளாதார யுத்தம்!

இறக்குமதிக்குதடை விதித்து

கென்னடி உத்தரவு

நாசவேலையில் ஈடுபடுவதை தடுப்பதே உத்தேசமாம்

வாஷிங்டன், பெப். 4

தனது உள்நாட்டு விவகாரத்தில் அமெரிக்கா குறுக்கிடுவதாக கியூபா செய்து கொண்ட புகாரை ஆராய ஐ. நா. அரசியல் கமிட்டி கூடுகிறது. இதே சமயம் செக்கோஸலோவேகியாவும், ருமேனியாவும் கூட்டாகக் கமிட்டியில் பிரேரணை செய்துள்ள ஒரு தீர்மானத்தில் கியூபாவில் அமெரிக்கத் தலையீட்டை நிறுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

மேலும், ஜனதிபதி கென்னடி கியூபாவிலிருந்து அமெரிக்க இறக்குமதியைத் தடை செய்திருக்கிறார். உருகுவேயில் கூடிய அமெரிக்கக் குடியரசுகளின் வெளிநாட்டு மந்திரிகளின் மகாநாட்டு முடிவைத் தொடர்ந்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கியூபாவின் வருமானத்தைக் குறைத்து, அது நாசவேலையில் ஈடுபடுவதை நிறுத்தச் செய்வதே ஜனதிபதியின் நடவடிக்கைக்கான காரணம் என அறிவிக்கப்பட்டது. ஜனதிபதி கென்னடியின் நடவடிக்கை காரணமாக கியூபா வருடம் ஒன்றுக்கு மூன்றரைக் கோடி டாலரை இழக்குமெனக் கூறப்பட்டது.

லத்தீன் அமெரிக்காவில் புரட்சினயத் தூண்ட இந்த டாலர் வருமானத்தை கியூபா உபயோகித்து வந்ததென்று அமெரிக்க வெளி நாட்டு மந்திரி திரு. டீன் ரஸ்க் அறிவித்தார். தாம் கைக்கொண்ட இந்த நடவடிக்கையை இதர அமெரிக்க நாடுகளும் பின் பற்ற வேண்டும் என ஜனதிபதி கென்னடி கூறியுள்ளார்.

ஏற்கெனவே கியூபாவுக்கு உணவுப் பொருள்கள், மருந்து வகைகள் போன்றவற்றைத் தவிர இதர அமெரிக்க ஏற்றுமதியும்கூட நிறுத்தப்பட்டுள்ளது. கியூபா-அமெரிக்கப் பிணக்கை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கவேண்டும் என ரஷ்யா பொதுச் சபையில் ஒரு நகல் தீர்மானத்தைச் சமர்ப்பித்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

பர்மிய இறக்குமதி முழுதும் அரசாங்கத்துக்கே

ரங்கூன், பெப். 4

பர்மாவில் இறக்குமதி வர்த்தகத்தை மேற்கொண்டிருக்கும் 2500 தனிப்பட்ட கம்பெனிகளுக்குப் பதில் முழு இறக்குமதியையும் 5 அராங்கக் கார்ப்பரேஷன்கள் மேற்கொள்ளும் என அறிவிக்கப்படுகிறது.

அரசியல் கட்சிகளுக்கு 10 நெறிகள்

ஹைதராபாத், பெப். 4

தேர்தலின்போது அரசியல் கட்சிகளின் நடத்தை பற்றி இங்கு கூடிய காங்கிரஸ், கம்யூனிஸ்ட், ஜனசங்கப் பிரதிநிதிகள் 10 நெறிகளை வகுத்திருக்கின்றனர். வெறுப்பு, பகைமையை வளர்க்கும் பிரசாரங்களை நிறுத்துவதும், ஜாதி, இனப் பாகுபாட்டை வளர்க்கும் பிரசாரங்களை நிறுத்துவதும் இவற்றில் அடங்கும்.

"நாட்டின் நலனுக்கு மக்கள் ஒத்துழைப்பு அவசியம்"

—எம். பி

பிங்கிரியா, ஞாயிறு

"நாட்டின் நலனுக்காக இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு பிரஜையும், ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்யமுடியும். எங்களால் எதைச் செய்யமுடியுமோ, அதைச்செய்ய நாம் தயங்கக்கூடாது. கஷ்டமான சில வேலைகளைச் செய்யமுடியாத சிலரும் நம்மத்தியில் இருக்கின்றனர். வேலை எதுவுமின்றி, சுலபமான வழிகள் மூலம் வாழ்க்கையை நடாத்த அவர்கள் முயலுகிறார்கள். இதனால்தான் இந்தநாடு முன்னேற்றம் எதுவுமின்றி செழிப்பில்லாத நாடாக விளங்குகின்றது"

தலவூட்டிமுல்ல அரசினர் கல்லூரியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பிங்கிரியா எம். பி. திரு. எல். பி. ஜயசேன பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. ஜயசேன மேலும் கூறியதாவது:-

"மக்களின் ஒத்துழைப்பெதுவுமின்றி, அரசாங்கத்தினால் மட்டும் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யமுடியாது. நாட்டின் முன்னேற்றத்துக்கு ஒவ்வொரு பிரஜையின் ஒத்துழைப்பும் அவசியம் தேவை. அரசாங்கம் கொண்டுவரும் எந்த அபிவிருத்தித்திட்டத்துக்கும், மக்கள் தங்களது மனப்பூர்வமான ஆதரவையும் ஒத்துழைப்பையும் கொடுக்க வேண்டும்."

வர்த்தக கல்வியில் ஊக்குவிக்க கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றம் அங்கத்தவர்களையும், மாணவர்களையும் வர்த்தகத் துறையில் ஈடுபட்டுள்ள வர்களையும், பொது மக்களையும் வர்த்தகக் கல்வியில் ஊக்குவிக்கும் பொருட்டு கட்டுரைப் போட்டிகளை நடாத்த ஒழுங்குகள் செய்துள்ளது.

அகில இலங்கை வர்த்தகக் கலைமன்ற அங்கத்தவர்களுக்கு ஐந்து பகுதியும், பாடசாலை மாணவர்களுக்கு இரு பகுதியும், பொது மக்களுக்கு ஒரு பகுதியும், வர்த்தக ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு பகுதியுமாக ஒன்பது பகுதிகளில் இந்த வர்த்தகக் கட்டுரைப் போட்டி நடைபெறவிருக்கிறது.

ஒவ்வொரு பகுதியிலும் சிறந்த முதல் மூன்று கட்டுரைகளுக்கு பரிசில்களும், பத்திரங்களும் இம்மன்றத்தின் ஆண்டு விழாவில் வழங்கப்படுமெனவும், முதற் பரிசில் பெறும் கட்டுரை மன்ற ஆண்டுமலரில் இடம்பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

"காங்கிரஸின் தோல்வி ஏழைகளின் தோல்வி"

கடலூர் பொதுக் கூட்டத்தில் முதன் மந்திரி காமராஜர்

கடலூர், பெப். 4

எதிர்க்கட்சிகளின் பிரசாரத்திற்கு இலக்காகிவிடாமல் நாட்டிற்கு நன்மைசெய்யக் கூடிய காங்கிரஸ் கட்சியை மக்கள் பலப்படுத்தவேண்டுமென்று இங்கு நடந்த பொதுக் கூட்டமொன்றிற் பேசும்பொழுது திரு. காமராஜ் கூறினர்.

ஏழைகளின் நிலையை உயர்த்த காங்கிரஸ் உழைத்துவருகிறதென்றும் காங்கிரஸ்தோற்றால் அது ஏழைகளின் தோல்வி தான் என்றும் அவர் பேசினர். கடலூர் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. எஸ். கதிர்வேலு கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

திரு. காராஜ் மேலும் பேசுகையில், மக்களின் பொருளாதாரத்தை உயர்த்தவே திட்டங்கள் உள்ளது என்றும் முதல், இரண்டாம் திட்டங்களில் வெற்றிபெற்று மக்களிடையே நம்பிக்கையைப்பெற்று விட்டதாகவும் கூறினர். மக்களின் முன்பாகக காங்கிரஸ் மூன்றாந் திட்டத்தை சமர்ப்பித்துள்ளதாகவும், வருகிற தேர்தலில் மக்கள் காங்கிரஸ கட்சிக்கு ஆதரவு அளிக்கவேண்டுமென்றும்கூறினர்.

பின்பு ஏழைகள், பின் தங்கிய வகுப்பினர்களின் நிலையை உயர்த்த கல்விச் சலுகைகள் போன்று காங்கிரஸ கட்சி அநேகவசதிகள்செய்துகொடுத்துள்ளது என்றும் காங்கிரஸ அரசாங்கத்தால் போடப்பட்ட திட்டங்களை பூர்த்தியாக்கி மக்கள் சுபிட்சம்பெற காங்கிரஸ கட்சிக்கு வோட்டுப் போட்டு ஆதரிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

அமெரிக்க நாடுகளில்கம்யூனிஸம் இனி தலைதூக்க முடியாது

கியூபா 'பிரஷ்டம்' பற்றி கென்னடி திருப்தி

வாஷிங்டன், பெப். 4

அமெரிக்க நாடுகளின் அயல்நாட்டு மந்திரிகள் செய்த முடிவு காரணமாக அமெரிக்க கோளார்த்தத்திலிருந்து கம்யூனிஸம் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளதாக யு. எஸ். ஜனதிபதி கென்னடி இன்று கூறினர்.

கென்னடி மேலும் கூறியதாவது:-

அமெரிக்க நாடுகளின் ஸ்தாபனத்தில் நாங்கள் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கிறோம். இந்த முடிவுமூலமாக ஸ்தாபனம் பலமடைந்துள்ளது. ஆகவே நமது கோளார்த்தத்தில் கம்யூனிஸம் ஒதுக்கித்தள்ளப்பட்டுள்ளது. கியூபா பிரச்சினைசம்பந்தமாக இந்தமுடிவு செய்யப்பட்டிருப்பதால், அமெரிக்க நாடுகள் முன்னேறமுடியும்.

சமீபத்தில் அமெரிக்க நாடுகள் மகாநாடுகூடி தீர்மானம் நிறைவேற்றியதன் விளைவாக கியூபா பிரதமர் காஸ்டிரோ தனியாக ஒதுக்கப்பட்டுவிட்டதாகவும், அவருக்கும்அமெரிக்க நாடுகளுக்கிடையே இனி உறவு இல்லையென்றும் யு எஸ். அயல்நாட்டு விவகாரமந்திரி ஸ்ரீரஸ்க் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறினர்.

அமெரிக்காக் கண்டத்தில் கம்யூனிஸத்தை முறியடிப்பதற்கு காஸ்டிரோ நடத்துவதுபோன்ற அரசாங்கங்களால் முடியாது என்றும், விறுவிறுப்பான ஜனநாயக ஆட்சிமுறைகளை ஏற்படுத்துவதன் மூலமாகவே இது சாத்தியம் என்றும் திரு ரஸ்க் கூறினர்.

அமெரிக்க நாடுகள் ஜனவரி மாதம் 30ந் திகதியன்று மகாநாடு கூடி கியூபாவை அமெரிக்க நாடுகளின் ஸ்தாபனத்திலிருந்து ஒதுக்கிவைப்பதென்று முன்நிலிருபங்கு மெஜாரிட்டி வாக்கு மூலமாக தீர்மானம் நிறைவேறியது.

நேருவின் சுதந்திர தின வாழ்த்து

கொழும்பு, ஞாயிறு

இலங்கையின் சுதந்திரதினத்தை முன்னிட்டு இந்தியப்பிரதமர் ஸ்ரீ நேரு, ஸ்ரீமதி பண்டாரநாயக்காவுக்கு அனுப்பியுள்ள ஒரு வாழ்த்துச் செய்தியில், இருநாடுகளின் உறவும் மேலும் மேலும் வளர்ந்துவரும் என நம்புவதாய்க் கூறியுள்ளார்.

பொலிஸ் சட்டம் திருத்தி அமைக்கப்படும்?

கொழும்பு, சனி

பொலிஸ சட்டத்தைத்திருத்தும் மசோதா ஒன்று வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியால் வரும் 13-ம் திகதி பார்லிமெண்ட் கூடும்போது கொண்டுவரப்படும்.

இது பற்றிய முன்னறிவித்தல் ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது.

துறைமுக தொழிலாளர் வேலைக்கு திரு பினர்!

கொழும்பு, ஞாயிறு

கொழும்புத் துறைமுகத்தில் வேலைநிறுத்தம் செய்த பெரும்பாலான தொழிலாளர்களும் வேலைக்குத் திரும்பிவிட்டதால், துறைமுக வேலைகள் அநேகமாக வழக்கம்போல் நடைபெறுகின்றன. சுமார் 15,000 தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பிவிட்டனர்.

9, 10-ம் திகதி கிராம சபைகள் தேர்தல்

யாழ்ப்பாணம், சனி

புலோலி, சுன்புரம் ஆகிய கிராம சபைகளின் தலைவர்கள் தெரிவு இம்மாதம் 9-ம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

முகமாலை கிராம சபைத் தலைவர் தெரிவு இம்மாதம் 10-ம் திகதி நடைபெறும்.

கிஸங்கா புதிய இடத்திற்கு கொண்டுசெல்லப்பட்டார்

விடுதலை செய்யுமாறு இளைஞர்கள் வேண்டுகோள்

லியப்போல்ட்வில்லி, பெப். 4

கைது செய்யப்பட்ட முன்னாள் காங்கோ உதவிப் பிரதமர் திரு. கிஸங்கா, கிட்டோவுக்கு அருகேயுள்ள மூவண்டா என்ற இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

திரு. கிஸங்காவை 4 தினங்களுக்குள் விடுவிக்காவிட்டால் நடவடிக்கை எடுக்கப்போவதாய் அவரை ஆதரிக்கும் இளைஞர் இயக்கம் எச்சரித்துள்ளது. திரு. கிஸங்கா புதிய இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருப்பதை ஐ. நா வும் ஊர்ஜிதம் செய்துள்ளது.

டில்லியிலுள்ள ஆபிரிக்க மாணவர் சங்கம் கிஸங்காவை விடுதலை செய்யுமாறு கோரியுள்ளது.

ஜனதிபதி டிகால்

பாரிஸ், பெப். 4

ஜனதிபதி டிகால் நாளை டெலிவிஷனில் பேசவிருப்பதை முன்னிட்டு முன்னேற்பாடாக 5000 பிரஞ்சுத் துருப்புக்கள் அல்ஜியர்ஸுக்கு அனுப்பப்பட்டன.

புதுடில்லி, பெப். 4

இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்த 18 பேர்களடங்கிய பர்மிய ராணுவக் கோஷ்டி இன்று ரங்கூனுக்குப் புறப்பட்டது.

"காங்கோவுக்கு ராணுவ உதவி தரவேண்டும்"

ஐ. நா. சபையில்அடெலலா கோரிக்கை

நியூயோர்க், பெப். 3

கடாங்காவின் பிரிவினை நடவடிக்கைக்கு அந்நிய கூலிப் பட்டாளத்தினரேதான் காரணம் என்று காங்கோ பிரதமர் திரு. அடெலலா நேற்று ஐ.நா. பொதுச் சபையில் உரை நிகழ்த்துகையில் கூறினர்.

ஐக்கிய காங்கோதான் காங்கோ அரசாங்கத்தின் கொள்கையென்றும் எப்பிரச்சினையையும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதுதான் அரசாங்கத்தன் இலட்சியமென்றும் திரு. அடெலலா கூறினர்.

திரு. ஹமர்ஷீல்ட் சமாதானத்துக்காகச் செய்த தியாகம் வீணாகிவிடாமல் பார்த்துக் கொள்வதுதான் காங்கோ அரசாங்கத்தின் இலட்சியமென்றும் அவர் சொன்னர்.

காங்கோவுக்கு ஐ. நா. ராணுவ உதவியளிக்கவேண்டுமென்றும் காங்கோவியர்களுக்கு ராணுவப் பயிற்சி அளிக்க உதவி செய்ய வேண்டுமென்றும் திரு. அடெலலா கேட்டுக் கொண்டார்.

ஒரு மைல் நீளமான 'வயர்' திருட்டு

பிங்கிரியா, ஞாயிறு

வாரியப்பொல என்ற இடத்திலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்துக்கப்பாலுள்ள புத்தளம் - சூருநாகல் வீதியில் ஒரு மைல் நீளமான தந்திக்கம்பி திருடப்பட்டுள்ளது.

மணி வாக்கு

மனிதனின் சுயமரியாதைக்கு அரணாக ஜனநாயகம் இருந்து வருகின்றது. மனித உரிமைகளையும் அது பாதுகாத்து வருகின்றது."

ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389

யாழ்ப்பாணம பிலவ ஆணடு தை மீ 23உ (5- 2 - 62)

பிரதமரின் செய்தி

நெருக்கடி மிகுந்த இவ்வேளையில் நாட்டு மக்கள் அனைவரும் அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனுமிருந்து சட்டத்தையும் ஒழுங்கையும் கடைப்பிடித்து ஒழுக வேண்டுமெனப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா சுதந்திர தினத்தன்று நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள தமது செய்தியில் வேண்டியிருக்கிறார்.

நாட்டில் எவ்வளவு எதிர்ப்புக்கள் இருந்தாலும் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு மக்கள் தங்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டுமென பிரதமர் கேட்டுள்ளார்.

ஒரு சோஷலிச சமுதாயமே பொருளாதார வளத்துக்கு வழிகோலுமென்பது காலஞ் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் நம்பிக்கையாக இருந்து வந்தது. 1956இல் அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது நாட்டில் மக்கள் ஆட்சி மலர்ந்து விட்டதென அவருடைய கட்சி மகிழ்ச்சியடைந்தது. மக்களின் நலத்தைக் கருதியே அவர் ஆட்சிப் பொறுப்பை நடத்திச் சென்றார் எனவும், அதிகாரம் படைத்த ஒரு சிலர் அனுபவித்து வந்த ஏகபோக உரிமைகளை அவர் பெரும்பான்மை மக்களுக்கு அளித்தார் எனவும் பிரதமர் தமது செய்தியிற் குறிப்பிட்டுள்ளார்.

காலஞ்சென்ற பண்டாரநாயக்காவின் அரசியற் கொள்கைகளையே தாம் தொடர்ந்து கடைப்பிடித்து வருவதாகவும் பிரதமர் தெரிவித்திருக்கின்றார். எனவே, சகலவிதமான எதிர்ப்புக்களையும் சமாளித்துக்கொண்டு தமது பணியைத் தொடர்ந்து செய்வதற்கு மக்களின் ஒத்துழைப்பை பிரதமர் பெரிதும் வேண்டி நிற்கின்றார்.

ஒரு நாடு பொருளாதார சுதந்திரமும் பெற்று முன்னேற வேண்டுமானால் தேசிய ஒருமைப்பாடு மிக அவசியமாகும். இலங்கையில் வாழும் சகல வகுப்பினரிடமும் 'நாம் இருக்கும் நாடு நமதே' என்ற எண்ணம் ஏற்படவேண்டும். இந்த உயர்ந்த இலட்சியம் கைகூடாதவரை எந்தநாடும் தனக்குக் கிடைத்த சுதந்திரத்தை எண்ணிப் பெருமையடைய முடியாது.

சமீபத்தில் சுதந்திரம் பெற்ற எத்தனையோ ஆசிய நாடுகள் வறுமையைப் போக்குவதிலும் நாட்டின் செல்வத்தைச் சகல மக்களும் அனுபவிக்கக் கூடிய பொருளாதார விருத்தியிலுமே கவனம் செலுத்தி வருகின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை அந்நாடு இரு ஐந்தாண்டுத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது. இப்போது மூன்றாவது திட்டத்தை விரிவான அடிப்படையில் ஆரம்பித்துள்ளது. கைத்தொழில், விவசாயம் அங்கு நல்ல முறையில் விருத்தியடைந்து வருகின்றன. அத்துடன் நாளாந்த வாழ்க்கைக்கு வேண்டிய முக்கிய மான பொருள்களும் அந்நாட்டிலேயே உற்பத்தி செய்யப் பட்டுவருகின்றன.

இலங்கையும் விவசாயம், கைத்தொழில், கூட்டுறவு போன்றதுறைகளில் உழைத்து வருவது உண்மையே. எனினும் நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில்தான் இன்றும் இருந்து வருகின்றது.

வறுமை, நோய், அறியாமை, பயம் ஆகியவற்றிலின்றும் நாடு விடுதலையடையும் போதுதான் உண்மையான சுதந்திரம் கிடைத்திருப்பதாகப் பெருமையடையலாம். இந்த இலட்சியத்தை நோக்கி இலங்கை முன்னேற வேண்டுமென்பதே அனைவரினதும் ஆசையாகும்.

'இன்று வேண்டாம் நாளைவா!'

வாயிற்படிகளில் கிரகங்களின் சின்னம்

அஷ்ட கிரகங்கள் ராகுவைப் பார்வையாளராக வைத்துக்கொண்டு பெரிய தேர் மாநாடு நடத்திக்கொண்டிருக்கும்போது மானிடர்களும் அந்த மாநாடு வெற்றிபெறவேண்டும், உலகநன்மைக்காக அதன் தீர்மானங்கள் பயன்படவேண்டும் என்ற வழிபாட்டில் ஈடுபட்டிருக்கின்றனர், அஷ்டகிரக சேர்க்கையையிட்டு அஞ்சவேண்டியதில்லையென விஞ்ஞானிகள் பலர் கருத்துத் தெரிவித்தும் இருந்தனர். உலக முழுவதிலும் இதனையடுத்து பல சுவையான சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. கிரகசேர்க்கைக்கு அமெரிக்க பத்திரிகைகள் முக்கிய இடமளித்து பிரசுரித்திருக்கின்றன. இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் அஷ்ட கிரக நிகழ்ச்சிகளின் செய்தித்தொகுப்பு இங்கு வெளியாகியுள்ளது.

வியாபாரம் மந்தம்

கடைகள் வழக்கம்போலத் திறந்திருந்தன. ஆனால் ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் கிரகசேர்க்கைக் காலத்தில் குடும்பத்துடன் இருக்கவேண்டுமென்பதற்காக தத்தம் கிராமங்களுக்குப் போய்விட்டதால் வியாபாரம் மந்தமாக இருந்தது.

வாய்தா பேரம்செய்யபெரிய வர்த்தகர்களும் முன் வராததால், அந்த வாணிபமும் மந்தமடைந்தது.

மஹாயக்ஞம்

டில்லி தலைவாசலில் பெரிய கொட்டகை எழுந்துள்ளது. இங்கு மகாயக்ஞம் நடத்தப்படுகிறது. நூற்றுக்கணக்கில் பண்டிதர்கள் இதற்காக வருவார்கள். ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சில இடங்களில் மக்கள் ஏழைகளுக்கு அன்னதானம் செய்கின்றனர்.

பூகம்பம் வந்தால் மக்கள் உபயோகிப்பதற்காக கூடாரங்கள் அமைத்திருக்கிறார்கள்.

ரயிலில் பிரயாணிகள் குறைவு

புதுடில்லி, பழைய டில்லி ரயில்வே நிலையங்களில் பிரயாணிகள் எண்ணிக்கை குறைந்து விட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன. ஆனால் கிரகபீதி விமானப் பிரயாணத்தைப்பாதிக்கவில்லை.

புத்தகக் கடைகளில், மத பிரார்த்தனை சம்பந்தமான நூல்கள் அதிகம் விற்பனையாகின.

இன்றுவேண்டாம் நாளை வா!

பெங்களூரில் அஷ்டகிரகபீதி பெரிதும் பரவியுள்ளது. வீடுகளில் 'இன்றுவேண்டாம் நாளை வா' என்று வாயிற்படியில் எழுதி வைத்து, அவரவர் மதச்சின்னங்களையும் பொறித்துள்ளனர். ஜோசியர் ஸ்ரீ பி. வி. ராமன் துவக்கிய மகாயக்ஞத்துக்கு மைசூர் போக்குவரத்து மந்திரி ஸ்ரீ கே. எப். பட்டீல் தலைமை வகித்தார். எல்லாச் கோவில்களிலும் மக்கள் பிரார்த்தனைகள் அர்ச்சனைகள், பூசைகள் நடத்தினர்கள்.

'பிரளயமோ அல்லது மொத்தமான உயிர்நாசமோ ஏற்படுவதற்கான அறிகுறிகள் இல்லை யெனத் தெரிவிக்கப்பட்டது.

வீட்டு வாசல்களில் குலதெய்வப் படம்

கோவை நடுவட்டப் பகுதி மக்களிடை எட்டுக் கிரக பீதி மிகுந்த அளவு பரவியுள்ளது. வீட்டு வாசல்களிலெல்லாம் தத்தம் குலதெய்வங்களின் படங்களை வைத்துள்ளார்கள். தியேட்டர்களிலும் மற்றும் பொதுபோக்கிடங்களிலும் கூட்டம் இல்லை. சகடபுரம்சுவாமிகள் இங்கு விசேஷ வேள்விகள் நடத்தினர்.

பம்பாய் நகரசபைக் கூட்டம் ஒத்திவைப்பு

பம்பாய் நகரான்மைக் கழகத்தின் கூட்டம் ஒன்று இன்று நடைபெறுவதாக இருந்தது. இன்று அஷ்டகிரக சேர்க்கையாதலால் சபையில் ஏதேனும் பேராபத்து ஏற்படுமோ எனப் பயந்து கூட்டம் ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

வாரணாசியில் சப்த மகாயக்ஞம்

வாரணாசியில் சப்த மகாயக்ஞமும், பிரார்த்தனைகள், ஜெபங்க முதலியனவுமிரவுபகலாக நடைபெறுகின்றன. நேற்று மாலையில் 500 பண்டிதர்களும் சமஸ்கிருத வித்துவான்களும் விஸ்வநாதர் ஆலயத்திற்கு அருகில் கூடி 9 நாள் சப்த மகாயக்ஞத்தை ஆரம்பித்தனர். அவர்கள் முதலில் ஊர்வலமாக யக்ஞம் நடைபெறும் இடத்திற்கு வந்தனர்.

இந்தியாவுக்குஎதிராய் பிரசாரம்செய்யவில்லை

—நேபாள மந்திரி

காட்மாண்டு, பெப்.4

இந்தியாமீதோ அல்லது அதன் பிரதம மந்திரிமீதோ தாம் ஒருபோதும் குற்றமெதையும் சாட்டவில்லையென்று நேபாள வெளிநாட்டு மந்திரி டாக்டர் துளசிகிரி இன்றுகூறினர்.

'தனது பிரதேசத்திலிருந்து நேபாளத்துக்கு எதிரான இயக்கத்தை இந்தியா அனுமதிக்காது என்று நேபாளத்துக்கு இந்தியா அளித்த வாக்குறுதியைத்தான் நான் அதற்கு நினைவுபடுத்தினேன்" என்றார்.

நேபாளவெளிநாட்டு மந்திரி நிகழ்த்தியுள்ளபல்வேறு உரைகள்பற்றி சமீபத்தில் புதுடில்லியிருந்துவந்த குறிப்புகளுக்கு நேபாள சர்க்காரின் பதில் இந்த ரீதியிற்தான் இருக்கும் என்பது இதிலிருந்து புலனாகின்றது.

மஹேந்திர மன்னருக்கு வரவேற்பு அளிப்பதற்காக நடந்த கூட்டமொன்றிற் பேசுகையில் டாக்டர் கிரி மேற்கண்டவாறு கூறினர்.

மப்பும் மந்தாரமும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கை பூராவிலும் கடந்த சில தினங்களாக மப்பும் மந்தாரமுமாக இருக்கிறது. இடையிடையே பெய்யும் மழை வெள்ளம் போடுமானால் அறுவடைக்குக் காத்திருக்கும் நெற்பயிர்கள் சேதமடையக்கூடுமென விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம், திருமலை, மட்டக்களப்பு, மலைநாடு மற்றும் இலங்கையின் பல இடங்களிலுமுள்ள ஆலயங்கள் யாவற்றிலும் விசேட ஆராதனைகளும், பூஜைகளும், வழிபாடுகளும், லட்சார்ச்சனைகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அரசாங்க சேவையிலுள்ளவர்கள் தொடக்கம் பள்ளிச் சிறுவர்வரை காலத்தோடேயே இருக்காலில் வீடு திரும்பியிருக்கின்றனர். மாலையில் யாழ்ப்பாண நகரமே அதிக நடமாட்டமின்றிக் காணப்பட்டது.

'எனது சட்டையை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டனர்'

இரு இளைஞர்கள் செயல் பற்றி மாணவி சாட்சியம்

கம்பஹா, ஞாயிறு

"அட்டனுகல கங்கையில், நானும் எனது தம்பியும் குளித்துக்கொண்டிருந்த சமயம் இரு இளைஞர்கள் அங்கு வந்து இழிவான வார்த்தைகளால் எங்களைத் தூற்றிவிட்டு, தேங்காய் ஓடுகளை எங்கள்மீது வீசினர்கள். பின்னர், எனது சட்டையையும் தம்பியினுடைய சாறனையும் ஒடுத்துக்கொண்டு ஓடிவிட்டார்கள்."

மங்கரிடியாவைச் சேர்ந்த 18 வயதுள்ள மாணவி, செல்வி பி. ஏ. விமலாவதி பெரேரா கம்பஹா அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு. எஸ். டி. ஜயசுந்தரா முன்னிலையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விமலாவதியையும் அவரின் சகோதரனையும் இழிவான வார்த்தைகளால் தூற்றி விமலாவதியின் சட்டையையும், சகோதரனின் சாறனையும் திருடியதாக மங்கிரிடியா - திஹாரியாவைச் சேர்ந்த பி. ஏ. செனிவரத்ன, பி. ஏ. றெயிமண்ட் ஆகிய இரு இளைஞர்கள் மீது குற்றம் சாட்டி இவ்வழக்கை நிற்றம்புவ பொலிஸ் இன்ஸ்பெக்டர் தொடர்ந்திருந்தார்.

இரு எதிரிகளும் தாங்கள் குற்றவாளிகள் அல்ல எனக் கூறவே, மாஜிஸ்டிரேட் வழக்கு விசாரணையை மார்ச் மாதம் 23-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

புதுடில்லி, பெப். 4

விருதுநகருக்கும் மானமதுரைக்குமிடையே 41 மைல் நீளமான ரயில்பாதை அமைக்கும் வேலை இன்று ஆரம்பமாகியது. இதற்கு 2 1/2 கோடி ரூபாய் செலவாகும்

ஆசிரியருக்குக் கடிதம்

மிருகபலி

சுழிபுரம் பத்திரகாளி அம்மன்கோவிலில் நடைபெற்று வந்த மிருகபலி நிறுத்தப்பட்டுவிட்டதாக பத்திரிகைகளில் வெளியானசெய்தி தப்பானது என்றும். பக்தர்கள் அதை நம்பவேண்டாமென்றும் மேற்படி கோவிலில் மிருகபலி தொடர்ந்தும் நடைபெறுமென்றும், ஈழநாடு பத்திரிகைமூலம் அதன் மனேஜர் விளம்பரப் படுத்தியதைப் படித்தேன்.

கோவில்களில் மிருகபலி செய்வதன் மூலம் மனிதர்களை கடவுளின் பக்தர்களென்று கருதப்படுகிறதா?

மகாத்மா காந்தி, ராஜாஜி போன்ற பெரியார்கள்கோவில்களில் மிருகபலிசெய்வது மகாபாவமென்றும் அதை நிறுத்தும்படியும் இந்தியாவிலும், இலங்கையிலும் வேண்டுகோள் விடுத்ததின்மூலம் அநேகம் கோவில்களில் மிருகப்லியை நிறுத்திவிட்டார்கள். ஒருசிலர் தங்களின் சொந்த வருமானத்திற்காக கோவில்களில் மிருகபலி செய்வதன்மூலம், மக்களைப் பிழையான வழியில் ஈடுபடுத்துவதை நினைக்கும்போது வெட்கமாகவும், வேதனையாகவும் இருக்கின்றது.

ச. மார்க்கண்டு
வவுனியா.

சிறந்த கால்நடைத் தீனி

பசும் சோளத் தட்டைகளைச் சிறு துண்டுகளாக நறுக்கி, காற்றுப் புகமுடியாத அடைப்பில் வைத்தால், அது கன்று காலிகளுக்கு நல்ல தீவனம் ஆகிறது. அந்தத் தீவனையை தின்னும் பசுக்கள் அதிகமாகப் பால் கொடுக்கின்றன அமெரிக்க தொழில் நுட்ப ஒத்துழைப்புக் குழுவைச் சேர்ந்த ராபர்ட் ஜி. கானல்லி சோளத் தட்டைத் தீனியை தயார் செய்துள்ளார். அவர் இந்திய அரசாங்கத்தின் பால் பண்ணை ஆலோசகராகப் பணியாற்றுகிறார்.

பால் கொடுக்கும் பசுக்களுக்கு நல்ல தீனி வேண்டும்; தென் இந்தியாவில் வைக்கோலை அவை தின்கின்றன. நல்ல உடல் நலத்தோடு அவை உயிர் வாழ்வதற்கும் அது போதாது; எனவே அவை பால் கொடுக்க முடியுமா என்று ராபர்ட் கானல்லி கூறினர்: துண்டாக வெட்டி, காற்றுப் புக முடியாத நிலையில் அடைத்துவைத்த பழைய சோளத் தட்டைத் துண்டுகள் பசுக்களுக்கு மிகவும் நல்லது என்று அவர் வலியுறுத்திக் கூறினர். பால் பண்ணைப் பணியில் 40 ஆண்டு அனுபவம் உள்ளவர் அவர். நிலக் கடலைப் பிண்ணாக்கும் பருத்தி விதையும் பசுக்களுக்கும் எருமைகளுக்கும், கொடுக்கவேண்டும்; பால் அதிகமாகச் சுரப்பதற்கு அது சிறந்த வழி என்றார் அவர். அதையே முக்கிய தீனியாகக் கொள்ளக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

செய்முறைகள்

சோளத் தட்டைத் துண்டுகளை அடைத்து இருக்கும் முறை விவசாயப் பொருட்காட்சியின் அமெரிக்க அரங்கில் காட்டப்படும். இருவகை மாதிரிகள் அங்கு இருக்கும். எளிதான முறைகள் அவை. குழியில் போட்டு வைப்பது செலவு இல்லாத முறை. குழி வெட்டுவது மிகவும் சுலபமே.

சோளம் அறுவடையானவுடன் பசுமை மாறும் முன்பே, தட்டைகளைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டவேண்டும்; அதன்பின் காற்றுப் புகாத இடத்தில் அவற்றை அடுக்கி வைக்கவேண்டும். தட்டைகளில் சர்க்கரை இருப்பதால் காற்றில்லாத நிலையில் அவைகள் தாமாகவே ஊறும். ஒரு மாதம் அவ்வாறு வைத்திருந்து பசுக்களுக்குப் போட்டால், பசுக்கள அவற்றை மிகவும் ஆசையுடன் தின்னும். பால் அதிகமாகக் கிடைக்கும்.

மனித உரிமைகள்

புதுடில்லியில் கருத்தரங்கு

புதுடில்லி, பெப். 4

உபராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், தகவல் சுதந்திரம் என்பதுபற்றிய மனித உரிமைகள் கருத்தரங்கொன்றை புதுடில்லியில் பெப்ரவரி 20-ந் தேதியன்று ஆரம்பித்து வைப்பார்.

மார்ச் 5-ந் தேதிவரையில் நடைபெறவிருக்கிற இந்த கருத்தரங்கில் பங்குகொள்ளும் நாடுகள், மனித உரிமைகள்பற்றிய தங்கள் கருத்தையும் அனுபவத்தையும் பரிமாறிக்கொள்ளுவதற்கும், அது சம்பந்தமான விஷயங்களைப்பற்றி இன்னும் அதிகமாகத் தெரிந்து கொள்ளுவதற்கும் சந்தர்ப்பமிருக்கும்.

பின்வரும் விஷயங்கள் கருத்தரங்கில் விவாதிக்கப்படும். அரசாங்கத்தின் பங்கு, பத்திரிகைச் சட்டம், வெளியிடுவோர் உரிமையாளர் பங்கு, பத்திரிகை ஆசிரியர் பங்கு, பத்திரிகை செய்தி, கட்டுரைகளின் தரம், வாசகர்களின் பங்கு

மத்திய, தென் கிழக்கு ஆசிய பொருளாதாரக் கமிஷனின் வியாபகத்துக்கு உட்பட்ட நாடுகளைச் சேர்ந்த 28 நாடுகளும் பிரதேசங்களும் கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டிருக்கின்றன. ஆஸ்திரேலியாவும் நியூஸிலாந்தும் பிரதிநிதிகளை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

சர்வதேச தொழிலாளர் நலக்கூடியம், யுனெஸ்கோ போன்ற ஸ்தாபனங்களும் பார்வையாளர்களை அனுப்பும், கருத்தரங்கில் விவாதிக்கப்படும் விஷயங்களுடன் நெருங்கிய தொடர்புள்ள நோக்கங்களையும் திட்டங்களையும் கொண்டிருந்து, பொருளாதார சமூக கௌன்சிலுக்கு ஆலோசனை அந்தஸ்திலுள்ள சர்க்கார் சார்பற்ற ஸ்தாபனங்களும் அழைக்கப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் இனிமேல் விசாரணை

மல்லாகம் மாஜிஸ்டிரேட் உத்தரவு

மாவிட்டபுரம், ஞாயிறு

கந்தரோடையைச் சேர்ந்த சரவணமுத்து சுப்பிரமணியம், திருமதி சிவபாக்கியம் சுப்பிரமணியம், சுப்பிரமணியம் சித்தியானந்தன், சுப்பிரமணியம் வினயகாஸ்வரன், நாகமுத்து சின்னத்துரை, பொன்னையா சுப்பிரமணியம் ஆகிய ஆறு நபர்களும் அவ்வூரைச் சேர்ந்த ஆறுமுகம் ஐயாச்சாமி என்பவரை கொலை செய்யும் நோக்கமாகச் சட்ட விரோதமாய்க் கூட்டம் கூடி ஐயாச்சாமியை பயமுறுத்தியதாக கன்னகம் பொலிசாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது வழக்காளி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ரகுபதி இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் மன்னிலையில் விசா

பாக் மந்திரியை பேசவிடாமல் தடுத்தனர்

டாக்கா, பெப். 4

பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. மன்சூர் காதிர் டாக்காப் பல்கலைக்கழகத்தில் உரை நிகழ்த்தும் போது, மாணவர்கள் கலாட்டாசெய்து அவரைப்பேச விடாமல் தடுத்துவிட்டனர். பின் மந்திரி வெளியேறி விட்டார்.

அரக்கு வெளையலுக்கு யோகம்!

ஜெய்பூர், பெப். 4

ஜெய்பூரில் அநாகரிகம் என்று வெகுகாலமாகத் தள்ளி வைக்கப்பட்ட அரக்கு விளையல்களுக்கு "திடீர்" கிராக்கி ஏற்பட்டுவிட்டது. குடும்பஸ்திரீகள் அதை யணிந்தால், கணவனுக்கு ஆயுள் வளருமென்ற நம்பிக்கை இவ்வட்டாரத்தில் இருந்து வருகிறது. எட்டுக்கிரக சேர்க்கை பழைய நம்பிக்கையைப் புதுப்பித்து' பழைய கால அரக்கு வளையல்களுக்கும் கிராக்கியை உண்டாக்கிவிட்டது.

அரிசி கடத்தியவருக்கு அபராதம்

சாவகச்சேரி, ஞாயிறு

நல்லூரைச்சேர்ந்த கந்தையா தர்மரத்தினம், தாமோதரம் பிள்ளை ரத்தினம், கந்தையா வினயகமூர்த்தி, சபாபதி பொன்னையா ஆகியநால்வரும் இறக்குமதி அரிசி ஒன்றரைமூட்டையைக் கடத்திச் செல்லும்போது ஆனை இறவுத்தடைதாண்டியில் வைத்து பிடிபட்டனர்.

விசாரணையில் தர்மரத்தினம் குற்றத்தை ஒப்புக்கெண்டார். சாவகச்சேரி நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் ரூபா 75 குற்றம் விதித்து மற்றவர்களை விடுதலை செய்தார்.

"அவசியமானால் பாக், சீனாவுடன் பலாத்காரம்"

—நேரு

"பாகிஸ்தானுடனும் சீனாவுடனும் சமாதான முறையிலேயே பிரச்சினைகளைத் தீர்க்க முயல்கிறோம். ஆனால் அவசியம் நேர்ந்தால் கோவா மீது எடுக்கப்பட்டது போல் அவைகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்" என பிரதமர் நேரு கூறினார்.

"ஆனால் பாகிஸ்தான் நம்மைத் தாக்கும் வரை நாம் தாக்கப் போவதில்லை என திட்டவட்டமாகக் கூறுகிறேன்" என்றும் நேரு கூறினர்.

---

5 நிபுணர்களை உதவுமாறு கோரிக்கை

கொழும்பு, ஞாயிறு

மேலும் ஐந்து நிபுணர்களைத் தந்துதவுமாறு ஐக்கியநாட்டு தொழில் நுட்ப சபையை

இன்று ஆப்ரேஷன் கிடையாது

கொழும்பு, ஞாயிறு

கொழும்பு ஜெனரல் ஆஸ்பத்திரியில், இன்றும் நாளையும் "ஆப்ரேசன்"செய்வதற்குக் காத்திருக்கும் நோயாளர்கள், அஷ்டகிரகசேர்க்கைபற்றி சிறிதும் அஞ்சத்தேவையில்லை என்று ஜெனரல் ஆஸ்பத்திரியின் வைத்திய சுப்ரீண்டன் அறிவித்துள்ளார். இதுபற்றி அவர் தெரிவிக்கையில்; ஞாயிற்றுக்கிழமைகளில் ஆப்ரேஷன் நடைபெற மாட்டாதென்பதால் இன்று ஆப்ரேசன் எதுவும் நடைபெறமாட்டாதென்றும், திங்கட்கிழமை பொது விடுமுறை தினமாதலால் நாளைய தினமும் ஆப்ரேஷன் நடைபெறமாட்டாதெனவும் அவர் கூறினர். செவ்வாய்க் கிழமை வழமைபோல் ஆப்ரேஷன் நடைபெறும்.

அஷ்டகிரக சேர்க்கையினால் பலர் லீவு எடுத்துக் கொண்டு தங்களது வீடுகளுக்குச் சென்றுவிட்டனர். முக்கியமான விஷயங்களைக்கூட சிலர் ஒத்தி வைத்துள்ளனர். இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள கோவில்களில் பூசைகளும், பிரார்த்தனைகளும் நடைபெறுகின்றன.

வெளி நோயாளர் ஆஸ்பத்திரியில் நேற்று முன் எந்த நாட்களிலும் பார்க்க நோயாளர்கள் மிகக் குறைவாகவே காணப்பட்டனர்.

கட்சிக்கு அடங்காத காங்கிரஸ்காரர்கள்

நூற்றுக்கணக்கில்வெளியேற்றப்பட்டனர்

லட்சுமணபுரி, பெப். 4

ராஜ்யசட்டசபை உறுப்பினர்கள்18 பேர் உட்பட உத்தரபிரதேசத்தில் 142 காங்கிரஸ்காரர்கள் பிரதேச காங்கிரஸ் தலைவர் அஜித் பிரசாத் ஜெயினால் வெளியேற்றப்பட்டார்கள்.

பொதுத் தேர்தலில் அதிகாரபூர்வ காங்கிரஸ் அபேட்சகர்களை எதிர்த்து அவர்கள் அனைவரும் போட்டியிடுகிறார்கள்.

1952 பொதுத் தேர்தலில் அதிகாரபூர்வ காங்கிரஸ அபேட்சகர்களை எதிர்த்து 343 காங்கிரஸகாரர்கள் நின்றார்கள். 1957 தேர்தலில் அவர்களின் எண்ணிக்கை 122 ஆக இருந்தது.

1952-ல் 1692 காங்கிரஸகாரர்களையும் 1957-ல் 195பேரையும் பிரதேச காங்கிரஸ் வெளிறது.

அதிகாரபூர்வ காங்கிரஸ அபேட்சகர்களை எதிர்த்து நிற்கும் 7 காங்கிரஸகாரர்களை 6 வருட காலத்துக்கு ஸ்தாபனத்திலிருந்து ஆந்திர பிரதேச காங்கிரஸ் கமிட்டி வெளியேற்றியது.

இத்துடன் போட்டி காங்கிரஸ்காரர்களின் எண்ணிக்கை ஆந்திராவில் எழுபத்தி ஒன்பதாகியுள்ளது.

மைசூரில் 34 காங்கிரஸகாரர்கள் 6 வருட காலத்துக்குக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள்.

அஷ்டகிரக சேர்க்கை நிவாரண வழிபாடு

மறவன்புலவு, திங்கள்

கடந்த இரண்டு தினங்களாக அஷ்டகிரக சேர்க்கை நிவாரண வழிபாடுகளும் அபிஷேகமும் மறவன்புலவு ஐயனார் கோவிலில் நடைபெற்று வருகிறது. பக்தர்கள் இரவு பகல் காத்திருந்து இறை வழிபாடு செய்து வருகின்றனர்.

மாணவர் அப்பியாச புத்தகங்கள்

ஈஸ்டர்ன் பேப்பர் மில்ஸ் கார்ப்பரேஷனால் தயாரிக்கப்பட்ட

முதல் தர ரக கடுதாசியைக் கொண்டு செய்யப்பட்ட மாணவர் அப்பியாசப் புத்தகங்கள் கோடுகள் இருப்பினும் இல்லாது விடினும் கீழ்க்கண்ட விலைக்கு இலங்கை முழுவதிலும் பெற்றுக்கொள்ளலாம்.

கடுதாசி தொகை	சில்லறை விலை அ. புத்தகம் ஒன்று	டசின்	மொத்த விலை குரொஸ்
40 பக்கம்	11 சதம்	ரூ. 1-20	ரூ. 14-40
80 ,,	20 ,,	,, 2-40	,, 28-80
100 ,,	30 ,,	,, 3-36	,, 40-32
200 ,,	60 ,,	,, 6-96	,, 83-52

மாணவர் அப்பியாசப் புத்தகங்கள் கீழ் வரும் பத்து ரகங்களிலும் கிடைக்கும் வேறுபட்ட ரகங்களெனினும் அப்பியாசப் புத்தகங்களின் விலை ஒன்றே.

அப்பியாச புத்தக ரகங்கள்:

ஒற்றைக் கோடிட்ட அப்பியாசப் புத்தகம், சதுரக் கோடு, இரட்டைக்கோடு (நீலம்), இரட்டைக்கோடு (நீலமும் சிவப்பும்) ஒருபக்கம் ஒற்றைக் கோடிட்டு மறுபக்கம் வரைக் கட்டமிடப்பட்டது, கோடு இடாது ஓரம் இடப்பட்டது, ஒரு பக்கம் ஒற்றைக் கோடிட்டு மறுபக்கம் கோடுகள் இல்லாதது, ஓரம் இடப்பட்ட அகலமான சதுரக்கோடுகள் இடப்பட்டது, ஓரம் இடப்படாத, அகலமான சதுரக் கோடிடப்பட்டது.

ஐந்தும் ஐந்துக்கு மேற்பட்ட குரொஸ் ஆடர் செய்பவர்களுக்கு:

1. 10 சத வீத கழிவு உண்டு.
2. கொழும்பு ஸ்டோருக்கு அண்மையிலிருக்கும் இடங்களுக்கு ரயில் செலவு ஸ்தாபனம் ஏற்றுக்கொள்ளும்.

விபரங்கள் அறிய:

ஈஸ்டர்ன் பேப்பர் மில்ஸ் கார்ப்பரேஷன்

போன்: 94040.

6, அல்பேட்க்ரெசன்ட், கொழும்பு 7.

அத்துமீறி பிரவேசித்து பலாத்காரம் புரிந்ததாகவழக்கு

எதிரி விடுதலை

மாவிட்டபுரம், ஞாயிறு

மாதகலைச் சேர்ந்த திருமதி தம்பிமுத்து அழகம்மா என்பவரின் வீட்டினுள் அத்துமீறி பிரவேசித்து அவர் மேல் பலாத்காரம் பிரயோகித்ததாக அதே ஊரைச் சேர்ந்த நீலன் சின்னப்பொடியன் என்பவர்மேல் சங்கானைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெல்லி டி தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் வழக்காளி முறண்பட்ட சாட்சியங்களை பொலிசாருக்கும் நீதிபதிக்கும் கூறியதால் நீதிபதி எதிரியை விடுதலைசெய்தார்.

அழகம்மா சாட்சியழிப்கையில் கூறியதாவது:- எனக்கு எதிரியைத் தெரியும். அவர் எனது கணவரின் தம்பியார். கடந்த வருடம் ஜூன் மாதம் 10ம் திகதி இரவு 7 அல்லது ஏழரை மணியளவில் நான் தனிமையாக வீட்டில் இருந்த போது எதிரி வீட்டிற்குவந்து தனது தமையனுனெனது கணவர் வீட்டில் இருக்கின்றாரா எனக்கேட்டார். எனது கணவர் வீட்டில் இல்லை என்று கூறியதும் அவர் எனது கையைப்பிடித்து இழுத்தார். அவ்வேளையில் எதிரி கையில் ஒரு கத்தி வைத்திருந்தார். நான் அவரது பிடியிலிருந்து பறித்துக்கொண்டுஓடியபோது அவர் என்னைத் துரத்தினர். நான் சத்தமிடவே எதிரி ஓடி விட்டார்."

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில்,எதிரிக்கு தானும் கணவனும் திருமணம் செய்து வைத்ததாயும் ஆனால் எதிரியின் மனைவி கர்ப்பமடைந்ததாலும் எதிரி மனைவியைவிட்டு தனது சகோதரியான நாகம்மாவை ஆசைநாயகியாகவைத்திருக்கிறார் என்றும் கூறினர்.

பொலிசார் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் எதிரி தனது கையில்பிடித்து அறைக்குள் இழுத்துச் சென்றார் என்றான் பொலிசாரிடம் முறையிடவில்லை என்றும் அப்படிப்பட்ட ஒரு முறையீட்டைப் பொலிசார் பதிவு செய்திருந்தால் அது பொலிசார் தாங்களே நினைத்து எழுதினதேயொழிய தான் கூறவில்லை என்றும் கூறினர்.

வழக்காளி பொலிசில் வேறு முறையிடும் கோர்ட்டில் வேறு சாட்சியமும் கூறியமையால் நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்.

"அரசாங்கம் 20வருடத்துக்கு நீடித்து நிற்கும்"

—முதூர் எம். பி.

திருகோணமலை, ஞாயிறு

"இந்த நாடு, பல நெருக்கடிகளையும் சமாளிக்கவேண்டியிருக்கிறது. இந்த நேரத்தில் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து, தங்களது பூரண ஆதரவை அளிப்பது இலங்கையிலுள்ள ஒவ்வொரு பிரஜையின் கடமையாகும்" என்று கிண்ணியா கிராம முன்னேற்ற நிலையத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் முதூர் எம். பி. திரு. ஏ. எல். ஏ. மஜீத் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது:— "இந்நாட்டின் பிரச்சினைகளை ஓரளவாக மந்திரிசபையினுல் சமாளிக்கமுடியும். அதற்கான தகுதியை மந்திரிசபை பெற்றிருக்கிறது. சில அரசியல் வாதிகள் கருதுவதுபோல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் விரைவில் வீழ்ச்சியடைந்துவிடாது. 5 வருடத்துக்கு மட்டுமன்றி இன்னும் 20 வருடகாலத்துக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் நீடித்து நிற்கும். விவசாயிகளுக்கும் தொழிலாளிகளுக்கு மிடையே பிரிவினை எதுவு மின்றி, இவர்களுக்கிடையே ஒரு ஒற்றுமையை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் உண்டுபண்ணியிருக்கிறது."

காணித் தகராறு

இருவர் மரணம்

குருநாக்கல், ஞாயிறு

காணித் தகராறு காரணமாக, இருவர் கத்திக்குத்துக் காயங்களுடன் மரணமானார்கள். குருநாக்கல் மாஜிஸ்டிரேட் திரு பேட்றம் சேனரத்ன முன்னிலையில் வண்டு றெளி இரட்டைக் கொலைவழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொளளப்பட்ட சமயம், 25 வயதுள்ள விதலை ஆர். டி. சுமணவதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மடுறுகொட என்ற இடத்தைச் சேர்ந்த டபின்யு ஏ. மல் கொண்டா எனபவரையும் எம். பி புஞ்சி அப்புஹாமி என்பவரையும் கத்தியால் குத்திக் கொலை செய்தும், டபிள்யு. ஏ. சரதியல் என்பவருக்குப் படுகாயம் விளைவித்ததாகவும் வண்டு றெலவைச் சேர்ந்த டபிள்யு. ஏ. பி. சிங்கோ, அவரின் மகன் புஞ்சி சிங்கோ, சிரிசேன, ஆகியோர் மீது குற்றம்சாட்டி இவ் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. மேல் விசாரணை இம் மாதம் 7ம் திகதிக்கு ஒதுக்கி போடப்பட்டுள்ளது.

மாணவியை பலாத்காரம் புரிய முயன்றதாய்

மாவிட்டபுரம், ஞாயிறு

சுவிபுரத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவியான 18 வயது நிரம்பிய செல்வி இராஜேஸ்வரி சரவணமுத்து என்பவரின் வீட்டில் அத்துமீறிப் பிரவேசித்து அவரைப் பலாத்காரம் புரிய முயன்றதாய் அவ்வூர் வாசியான தம்பையா மகாலிங்கம் என்னும் வாலிபர் மேல் சங்கானை பொலிசாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெல்லி டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் இராஜேஸ்வரியின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

அவர் தமது சாட்சியத்தில் கூறியதாவது:

"கடந்த வருடம் செப்டம்பர் மாதம் 11ந் திகதி இரவு 8 மணியளவில் நான் வீட்டுக் குசினியில் சமைத்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது எதிரி அங்கு வந்து என்னைக் கூப்பிட்டார். பின்னர் என்னைக் கெட்டவார்த்தைகளால் ஏசினர். இதைக் கண்டுவிட்டு எனது தாயார் எதிரியை வீட்டிலிருந்து துரத்தினர். எதிரிக்கு மூளை சரியில்லை. நான் பாடசாலைக்குச் செல்வதை நிறுத்தும்படி எதிரி என்னிடம் ஒருநாள் கூறினர். ஆனால் நான் பாடசாலைக்குச் செல்வதை நிறுத்தவில்லை. இதனால் எதிரி நான் பாடசாலைக்குச் செல்லும் சமயங்களில் கல்லால் எறிந்து துன்பம் விளைவித்துவந்தார்"

எதிரி, நான் இனிமேல் இராஜேஸ்வரிக்கு ஒரு தொந்தரவும் கொடுக்கமாட்டேன் என நீதிபதிக்கு வாக்குறுதி அளித்து அதன்படி பதிவுப் புத்தகத்தில் கையொப்பமிட்டதால் நீதிபதி எதிரியை எச்சரித்து ரூபா 5 தருமப்பணமாகக் கட்டும்படிஉத்தரவிட்டார்.

சட்டவிரோதமாக குடியேறியதாக குற்றச்சாட்டு

மாவிட்டபுரம், ஞாயிறு

சட்டவிரோதக் குடியேற்றக் காரரென சந்தேகிக்கப்பட்டு சுன்னகம் பொலிசாரால் கைது செய்யப்பட்ட குருஸ் சூசேமாணிக்கம் என்பவரைச் சுன்னகம் பொலிசார் மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் ஆஜர் செய்தபோது நீதிபதி சந்தேக நபரை ரூபா 1000 பிணையில் செல்லும் படியும் இம்மாதம் 17-ந் திகதி கோர்ட்டில் ஆஜராகும் படியும் கட்டளையிட்டார்.

விடுதி மனேஜர் பதவிக்கு 1,500 பேர் மனுச் செய்தனர்!

குருநாகல், ஞாயிறு

குருநாகல் மாலியதேவா கல்லூரி விடுதி மனேஜர் பதவிக்கு ஆங்கிலம், சிங்களம் சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் சித்தி பெற்ற 1,500-க்கு அதிகமான இளைஞர்கள் மனுச் செய்திருக்கின்றனர். விடுதி மனேஜர் பதவிக்கு ஒய்வு பெற்ற அரசாங்க ஊழியர்கள் பலரும் மனுச் செய்திக்குகின்றனர்.

காந்திஜி சிரார்த்த தினக் கூட்டம்

மாவிட்டபுரம், ஞாயிறு

உறுதிகொண்டஉள்ளத்தினராய் இளைஞர் வாழப்பழகல்வேண்டும். அன்றியும்முயற்சியுடையோராக அயற்சியின்றி ஆக்கப்பாட்டில் ஊக்க மடைதலொன்றே காந்தியடிகளுக்குச் செய்யும் கைமாறு ஆகும்." காங்கேசன்துறை இளம் தமிழர் இயக்கத்தினுல் கொண்டாடப்பட்ட காந்திஜி சிரார்த்த தின நினைவுவிழாவில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்ட ஆசிரியர் திரு. சி. வேலாயுதம் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "ஒன்றுபட்டு நன்று பல செய்யவும், அமைதியும் சாந்தமும் எந்நிலையிலும் கடைப்பிடித்து நடக்கும் உத்தமர்களாக வாழ்தலொன்றே காந்தியடிகளின் விழாக்களைக் கொண்டாடுவதனுல் உள்ள பயனுகும். அவ்வழி நிற்றலே அஹிம்சாமூர்த்தியின் ஆத்மாவுக்குச் சாந்தியளிக்கும்" என்றார்.

இக்கூட்டத்திற்கு திரு. முருகப்பெருமான் தலைமை வகித்தார்.

ஆசிரியர்கள் க. சச்சியானந்தம், நா. பொன்னம்பலம் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்கள்.

அதிசய கன்றுக்குட்டி

தெஹியோவிட்ட, ஞாயிறு

தெரணியகலை என்ற இடத்திலிருந்து சுமார் 7 மைல் தூரத்திலுள்ள ஹத்கெல என்ற இடத்தைச் சேர்ந்த திரு. எச். பி. மெத்தியஸ் என்பவருக்குச் சொந்தமான ஒரு பசு, அதிசயமான ஓர் கன்றை ஈன்றிருக்கிறது. இந்த அதிசய கன்றுக்குட்டிக்கு இரு தலைகளும் நான்கு காதுகளும், நான்கு கண்களும், இரு வாய்களும் இருக்கின்றன! அதிசய கன்றுக்குட்டியை தினமும் ஏராளமான பேர் பார்வையிடுகின்றனர்.

கனடாவிலிருந்து கருவாடு இறக்குமதி?

கொழும்பு, சனி

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து கணிசமான அளவு கருவாடு இறக்குமதி செய்வதில் உள்ள கஷ்டம் காரணமாக கனடா, ரஷ்யா ஆகிய நாடுகளிலிருந்து கருவாடு இறக்குமதி செய்வதற்கான முயற்சிகள் நடைபெறுவதாகத் தெரியவருகிறது.

மொத்த விற்பனையில் ஐந்து சதவீத வரிவிதிக்கும் வருமான வரி இலாகாவின் திட்டம் தான் இந்தியா, பாகிஸ்தான் கருவாடு இங்கு இறக்குமதி செய்யப் படுவதில் கஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

கனடாவிலிருந்தும் ரஷ்யாவிலிருந்தும் கருவாடு இறக்குமதி செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

பொது வர்த்தகர் சங்கம் ஆரம்பிக்கப்படும்

யாழ்ப்பாணம் முதலாளிகள் மகாநாட்டில் முடிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

பல்வேறு வர்த்தக ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளையும் கொண்ட பொது வர்த்தகர் சங்கமொன்றை மிக விரைவில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பதென நேற்று யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாசாலையில் கூடிய யாழ்ப்பாணம் வர்த்தக ஸ்தாபனங்களின் சொந்தக்காரர் மாநாடு முடிவு செய்துள்ளது.

இம்மாநாடு முதலியார் வி. மகேசன் தலைமையில் நடைபெற்றது. சுமார் 600 பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர்.

கடை காரியாலய ஊழியர் சட்டம், ஊழியர் சேமலாப நிதிச் சட்டம், கடைச் சொந்தக்காரர்கள் கடமைகள் ஆகியவற்றை விளக்குவதற்காக யாழ்ப்பாணம் உதவி தொழில் கமிஷனர் திரு. வி. சுப்பிரமணியத்தினுல் இம்மாநாடு கூட்டப்பெற்றது. மாநாட்டில் கிளப்பப்பட்ட சந்தேக விளக்களுக்கும் தொழில் சட்டப் பிரச்சினைகளுக்கும் உதவிக் கமிஷனர் விளக்கம் கொடுத்தார்.

வெவ்வேறு துறைகளில் ஈடுபட்ட வர்த்தக ஸ்தாபனங்கள் தனித்தனியே சேர்ந்து தங்கள் பிரதிநிதிகள் மூலம் மேற்குறிப்பிட்ட பொது வர்த்தக சங்கமொன்றை அமைப்பதென முடிவு செய்யப்பட்டது. இதன்படி ஒவ்வொரு துறைக்கும் ஓர் சங்கம் அமைக்கப்படும். இவற்றின் பிரதிநிதிகள் சேர்ந்தே பொது அமைப்பை ஏற்படுத்துவார்கள். இச் சங்கங்களை ஆக்கி பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் வேலையை உதவி ஆணையாளர் செய்வதாகத் தெரிவித்தார்.

புதிதாக அம்மைநோய் எவருக்கும் காணவில்லை

சுகாதார மந்திரி அறிவிப்பு

கொழும்பு, ஞாயிறு

கொழும்பு நகரிலும், சுற்றுப் புறங்களிலும். பெருந்தொகையானவர்களுக்கு அம்மைநோய் தடுப்புப் பால் கட்டப்பட்டு விட்டதாக, நகரசபை சுகாதாரப் பகுதி அதிகாரிகள் கூறுகின்றனர். எவருக்கும் புதிதாக இந்த நோய் கண்டதாகத் தெரியவில்லையென்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேற்று அறிவித்தனர்.

கொழும்பிலுள்ள ஜெனரல் ஆஸ்பத்திரியின் 30-ம் இலக்க வார்ட் நேற்று மீண்டும் பொது மக்களுக்கு திறக்கப்பட்டது. ஆனால் 24 வது இலக்க வார்ட் தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கிறது.

கடந்த வெள்ளிக்கிழமை வரை கொழும்பு நகரில் சுமார் 128, 522 பேருக்கு அம்மை நோய் தடுப்புப் பால் கட்டப்பட்டிருப்பதாக உயர்தர வைத்திய அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். கொழும்பு நகரில் 26 பால் கட்டும் நிலையங்கள் புதிதாக திறக்கப்பட்டுள்ளன.

உதைபந்தாட்டம்

மாவிட்டபுரம், ஞாயிறு

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவின் கீழ் குருநகர் யூனிட்டட் விளையாட்டுக் கழகத்திற்கும் புனிதவளன் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இரு கோஷ்டியினரும் தலா ஒரு கோல் போட்டமையால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.